மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி.
முன்னிலை : திரு.கே.ராஜேஷ்கண்ணன், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருத்துறைப்பூண்டி.
2019ம் ஆண்டு நவம்பர் மாதம் 13ம் நாள் புதன்கிழமை
அ.வ.எண். 1/2018

வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டின் இந்திய சாட்சிய சட்டத்தின் 44-வது சட்ட ஏற்பாட்டின்படி திரு.கே.ராஜேஷ்கண்ணன், பி.ஏ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, அவர்களால் ஆணையிடப்பட்டு கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கலைச்செல்வி | வயது | 55/2019 |
| க/பெ | பாலு | தொழில் | வீட்டுக் குடித்தனம் |
| ஜாதி | | மதம் | இந்து |
| கிராமம் | | தாலுக்கா | திருத்துறைப்பூண்டி |

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் 1ம் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணையில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். 30.07.2009-ம் தேதிய கிரய ஆவணத்தின் பதிவு நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.த.சா.ஆ.1 ஆகும். 14.04.2014-ல் பிறப்பிக்கப்பட்ட பட்டா மாறுதல் உத்தரவு தாக்கல் செய்கிறேன். வில்லங்க சான்று தாக்கல் செய்கிறேன். 01.12.1993-ம் தேதிய கிரய ஒப்பந்தம் தாக்கல் செய்கிறேன். 17.07.2017-ம் தேதியன்று வழங்கப்பட்ட பட்டா தாக்கல் செய்கிறேன். அது வா.த.சா.ஆ.2 ஆகும். எனது குடும்ப அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். தாவா சொத்திற்குரிய வீட்டு வரி ரசீதுகள் (எண்ணிக்கை - 2) தாக்கல் செய்கிறேன். அது வா.த.சா.ஆ.3 ஆகும். தாவா சொத்திற்குரிய மின் கட்டண ரசீதுகள் (எண்ணிக்கை - 2) தாக்கல் செய்கிறேன். அது வா.த.சா.ஆ.4 ஆகும். தாவா சொத்திற்குரிய புல வரைபடம் தாக்கல் செய்கிறேன். தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர், நில அளவையர் உதவியுடன் பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார். அவைகள் முறையே நீ.ம.சா.1 முதல் நீ.ம.சா.4 ஆகும்.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)